சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1294 / 2022**

**and**

**OS.No.1367/2022**

வா.சா.1. ராமஅருள்அரசன் 12.11.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.1367/2022-ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் விவசாயம் மற்றும் வழக்கறிஞர் தொழிலும் செய்து வருகிறேன். நான் 20 ஆண்டுகளாக வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். அ.வ.எண்1367/2022ல் குறிப்பிடப்பட்டுள்ள வாதிகள் எனக்கு ஒருவகையில் உறவினர்கள். அவர்களுக்காகவும் சேர்த்து தான் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு முதலில் அ.வ.எண்.534/2018 ஆக பழனி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த வழக்கு என்றால் சரிதான். பழனி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு நிலுவையில் இருந்த காலகட்டத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு வாதம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை மற்றும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்களும் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இதே சொத்து சம்மந்தமாக எனது தந்தை வாதியாக முன்னின்று ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.54/2009 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுதே எனது தந்தை தியாகராஜன் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபின்பு அந்த வழக்கை நான் தான் மற்ற வாதிகளுக்காகவும் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அ.வ.எண்.54/2009 வழக்கு தான் இந்த நீதிமன்றத்திற்கு அ.வ.எண்.1294/2022 ஆக மாறுதல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகளை அ.வ.எண்.1294/2022 என்ற வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் முன்னின்று வாதியாக நடத்துகின்ற போது ஏன் அ.வ.எண்.1367/2022 வழக்கில் 1, 2 பிரதிவாதிகளை அ.வ.எண்.1294/2022 ல் ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அ.வ.எண்.1294/2022 வழக்கு பழைய வழக்கு என்பதால் நான் சேர்க்கவில்லை. அ.வ.எண்.1294/2022 வழக்கும் அ.வ.எண்.1367/2022 வழக்கிலும் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் ஒன்று தான் என்றால் சரிதான். ஆனால் பரிகாரங்கள் தனித்தனியாக கேட்கப்பட்டுள்ளது. அ.வ.எண்.1294/2022 வழக்கில் தாவா சொத்துக்களை பொறுத்து அரசாங்கம் கொடுத்த பட்டாக்கள் செல்லாது என்று அறிவிக்க கோரியும் அ.வ.எண்.1367/2022 வழக்கில் 1ம்

பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த விடுதலைபத்திரமும் 2018-ம் ஆண்டு எழுதிக் கொடுத்த திருத்தல் பத்திரமும் செல்லாது என்று அறிவிக்க கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அ.வ.எண்.1367/2022 ல் என்னிடம் காட்டப்படும் பிராதில் பரிகார காலத்தில் அது போன்ற பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் பரிகார காலத்தில் சொல்லப்படவில்லை. அ.வ.எண்.1367/2022 வழக்கில் தாவா சொத்துக்களில் வாதிகளாகிய எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய கோரி தான் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரத்தையோ 2018-ம் ஆண்டு எழுதிக் கொடுத் பிழைதிருத்தல் பத்திரத்தை செல்லாது என அறிவிக்க கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10வது பாராவில் சொல்லியுள்ளேன். பிராதில் 10 பக்கத்தில் சொல்லியுள்ள பொருண்மைகள் அனைத்தும் பரிகாரமாக கோரமுடியாது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.1294/2022 லும் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை செல்லாது என அறிவிக்க கோரி நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த இருவழக்கிலும் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் தரப்பில் கோரியுள்ள பரிகாரம் ஒன்று தான் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது அப்பாவின் தாத்தா ராமசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதனா். ராமசாமிகவுண்டருக்கு சிவகிரி பழனிச்சாமி மற்றும் செம்பாக்கவுண்டர் என்ற இரு மகன்கள் தான் என்றால் சரிதான். சிவகிரி பழனிச்சாமி எனக்கு பெரிய தாத்தா. அவருடைய மகன் தான் ராமசாமி அவர் இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி என்றால் சரிதான். ராமசாமிக்கு தற்போது இரண்டு மகன்கள் உள்ளனா். ராமசாமயின் ஒரு மகனை மட்டும் தான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். மற்றொரு மகனை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா செம்பாக்கவுண்டருக்கு ராமசந்திரன், தியாகராஜன் ஆகிய இருமகன்கள் என்றால் சரிதான். தியாகராஜனின் வாரிசுகள் தான் வாதிகளாகிய நாங்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகேதாரர் ராமசந்திரன் திண்டுக்கலில் வழக்கறிஞர் தொழில் செய்து இறந்துபோய்விட்டார். அவரது மகன் ராஜேந்திரன் தற்போது வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறார். ராஜேந்திரனுக்கு சரவணன் என்ற மகன் உண்டு. அவரும் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறார். ராமசந்திரனின் வாரிசுகளான ராஜேந்திரன் மற்றும் சரவணன் ஆகியோர்களை நாங்கள் தாக்கல் செய்த இருவழக்கிலும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து இதுவரைக்கும் பிரிக்கப்படாத சொத்து என்றால் சரியல்ல. 1985-ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவண தேதி வரை பிரிக்கப்படாத சொத்து. சிவகிரி பழனிச்சாமியின்

வாரிசுகளும் செம்பாக்கவுண்டர் வாரிசுகளும் 1985ம் ஆண்டு வரை பிரிக்கப்படாத சொத்துக்களாக பொதுவாக வைத்து அனுபவித்து வந்தார்கள் என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். 1985-ம் ஆண்டு யார் யாருக்கு இடையே பாகவிஸ்தி ஏற்பட்டது என்றால் அப்போதும் ஏற்படவில்லை. செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி அந்த சொத்து எங்களுக்கு வந்தது. 100 வருடங்களுக்கு மேற்பட்ட பிரிக்கப்படாத பூர்விக சொத்தை பொறுத்து அவரது வாரிசுகளுக்கிடையே மட்டுமே பாகபிரிவினை ஏற்படுத்தி கொள்ளப்படக்கூடிய சட்டபடியான ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியப்பா தான் எழுதிக் கொடுத்தார். எனது பெரியப்பா ராமசந்திரன் வழக்கிறஞர் தான் பணம் 5000 பெற்றுக் கொண்டு விடுதலைபத்திரம் எழுதிக் கொடுத்தார். எனது பெரியப்பா ராமசந்திரன் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் செல்லக்கூடிய ஆவணங்கள் என்று எனக்கு தெரியும். தாவா சொத்துக்களை பொறுத்து எனது பெரியப்பா ராமசந்திரன் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் பற்றியே தெரியும். அதே ராமசந்திரகவுண்டருக்கு எனது தந்தை குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் மூலம் திருப்பி எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்க தெரியாது, அவ்வாறு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. செம்பாகவுண்டர் வகையறாவுக்கும் சிவகிரி பழனிச்சாமி குடும்பத்திற்கு இடையே பிரிக்கப்படாத சொத்துக்களை வாய்கரலாக பாகபிரிவினை மூலம் பாகம் பிரித்து கொண்டதாக ஆவணம் எதுவும் எழுதிக் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. விடுதலை ஆவணம் இருந்ததால் நாங்கள் எழுதவில்லை. செம்பாகவுண்டரின் வாரிசுகளான ராமசந்திரன், தியாகராஜனும் செம்பாக்கவுண்டருக்கு ஒதுங்கியதாக சொல்லப்படும் சொத்துக்களை பொறுத்து பாக பரிவினை ஏதும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்கள் பாகபிரிவினை செய்து கொள்ளப்பட்டது. 1959ம் ஆண்டு செம்பாக்கவுண்டரின் வாரிசுகளான ராமசந்திரன் மற்றும் தியாகராஜன் இடையே பாக பிரிவினை ஏற்பட்டது. அந்த பாகபிரிவினையில் என்னென்ன சொத்துக்கள் எனது அப்பா தியாகராஜனுக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையில் சிந்தலவாடம்பட்டியில் உள்ள சர்வே எண்.242/1ல் கண்டுள்ள அனைத்து சொத்துக்களும் எனது தகப்பனாருக்கு தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.242/1, 242/4 ஆகிய சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் தற்போது எங்களிடம் தான் உள்ளது. அந்த சொத்தின் விஸ்தீரணம் மற்றும் அமைப்பு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. விஸ்தீரணம் 12 ஏக்கர் (22 குழி வரும்) அமைப்பு என்பது விவசாய பூமி ஆகும். என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம் எனது பெரியப்பா ராமசந்திர கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகள் கந்தசாமிகவுண்டருக்கு சர்வே எண்.242/1, 242/4 ல் கண்ட சொத்துக்களை

கிரையம் செய்து கொடுத்துள்ளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. பாகபிரிவினையில் செம்பாகவுண்டரின் மகனான தியாகராஜனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ராமசந்திரகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைபொறுத்து 02.04.1987-ம் தேதி குடும்ப ஏற்பாட்டு ஆவணம் ஒன்றை எழுதிக் கொண்டு தியாகராஜனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் சில சொத்துக்களை ராமச்சந்திரகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்கள் தியாகராஜனுக்கும் கொடுக்கப்பட்டதாக மாற்றி எழுதப்பட்டதாக கண்டு குடும்ப ஏற்பாட்டு ஆவணம் எழுதிக் கொள்ளப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ராமசந்திரகவுண்டர் தியாகராஜனுக்கு எழுதிக் கொடுத்த தாவா சொத்தையும் சிந்தலவாடம்பட்டி கிராம் சர்வே எண்.242/1, 242/4ல் கண்ட சொத்தையும் மீண்டும் 02.04.1987-ம் தேதிய குடும்ப ஏற்பாட்டின் படி தியாகராஜன் ராமசந்திரனுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த குடும்ப ஏற்பட்டு ஆவணத்தின் படி ராமசந்திர கவுண்டருக்கு கிடைக்கப்பட்ட தாவா சொத்தையும் சிந்தலவாடம்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்.242/1, 242/4ல் கண்ட சொத்துக்களையும் அவரது மனைவி மற்றும் மக்களுக்கு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சிந்தலவாடம்பட்டி கிராமத்தில் ராமசந்திரனுக்கு கொடுக்கப்பட் சொத்துக்களை உயில் சாசனத்தின் அடிப்படையில் அனுபவித்து வந்து சர்வே எண்.242/1, 242/4ல் கண்ட சொத்துக்களை கந்தசாமி கவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் அதேபோன்று தான் தாவா சொத்துக்களை ராமசந்திரனின் வாரிசுகள் ராமசந்திரனின் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பழனி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.1367/2022 வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் எனது தரப்பு வழக்கறிஞர் ராமசாமி எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை தியாகராஜன் மீண்டும் ராமசாமிக்கே இனாம் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் அதன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு வாதிகள் தரப்பில் ஒரு குறிப்பாணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த அசல் ஆவணம் ஒப்படைக்கவில்லை. அந்த குறிப்பாணையின் அடிப்படையில் அசல் ஆவணத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவில் பிரதிவாதிகள் அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த அசல் ஆவணம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றும் அந்த அசல் ஆவணம் வழக்கு கோப்பில் இருந்து வரும் விபரமும் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோன்று 15.04.2014-ம் தேதி 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1-ம் பிரதிவாதிக்குள்ள பாகத்தை பொறுத்து எழுதிக்

கொடுத்த தானசெட்டில்மெண்ட் பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று நாங்கள் குறிப்பாணையில் கோரிய இனாம் சாசனத்தை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அதுபோன்று ஒரு இனாம் சாசனமே இல்லை.

(அசல் வழக்கு எண்.1367/2022ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.12 17:53:20 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்